**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்,இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும்

ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள்ளே தொடர்புடைய சட்ட திட்டங்களிற்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியுள்ளா என்பதும்,

### 1.5 நிதிக்கூற்றுக்கள

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 பந்தியின் பிரகாரம், பொருண்மையான கடந்த காலப் பகுதிக்கான தவறுகள் அவற்றை கண்டு பிடித்த பின்னர் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியில் தவறு இடம்பெற்ற காலப் பகுதிக்காக சமர்ப்பித்துள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் வெளியிட்டு பின்நோக்கி சரி செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் படி செயற்படாது தேசிய சுகாதாதார நிதியத்தின் கடந்த ஆண்டின் செம்மையாக்கல் என ரூபா 26,162,310 ஆன மீதி 2023 சனவரி 01 திகதிக்கு முன்கொண்டு வந்த திரண்ட மிகைக்கு மற்றும் நடைமுறை ஆண்டின் அதனுடன் தொடர்புடையகணக்குகளில் செம்மையாக்கப்பட்டு இருந்தது. | பொருண்மையான கடந்த காலப் பகுதிக்கான தவறுகள்இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 27,28,33,48 மற்றும் 54 பந்திகளின் பிரகாரம் சரியாக செம்மையாக்கியுள்ளதாக,இலங் கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 27 மற்றும் 28 பந்திகளின் பிரகாரம் பின்நோக்கி சரி செய்தல் என்பது கடந்த ஆண்டின் முன் கொண்டு வரப்பட்ட கணக்குகளின் ஆரம்ப மீதிகளின் செம்மையாக்கல் என மற்றும் எவ்விதமான குறை மதிப்பீடோ அல்லது மிகை மதிப்பீடோ நிதிக்கூற்றுக்களில் இடம்பெறவில்லையென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 69 பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதி முதல் பெறுமானத் தேய்விட வேண்டிய போதும், அதற்கு இணங்காதவாறு சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்த திகதியை கவனத்திற் கொள்ளாது சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கு பின்னறான ஆண்டிலிருந்து பெறுமானத் தேய்விடும் கணக்கீட்டுக் கொள்கையை நிதியம் செயற்படுத்திருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 02, 71 மற்றும் 88பந்திகளின் பிரகாரம் சொத்துக்கள் முகாமைத்துவ கொள்கையை சரியாக இண்டுள்ளதாக மற்றும் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு கொள்கையை குறித்த நிறுவனத்தின் முகாமைத்துவ தீர்மானத்தின் மீது நிர்ணகிக்க முடியுமென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண் வங்கிக்குரியதாக ஆண்டினுள் மேற்கொண்டிருந்த மீள்மதிப்பீட்டின் இலாபம் ரூபா 27,714,909 மற்றும்தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் அட்டுறு செலவினத்திற்காக கடந்த ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட எனினும் மீளாய்வாண்டில் செலவிடாத ரூபா 202,309,478 தொகை பிழையான விதத்தில் ஆண்டின் வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கிய காரணத்தால் ஆண்டின் மிகை ரூபா 230,024,387 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 27,28,33,48,54 பந்திகள் மற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 52 பந்தியின் பிரகாரம் சரியாக செம்மையாக்கி உள்ளதென, அனைத்து செம்மையாக்கல்களும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஐந்தொகையில் சிறிய பங்குதாரர்களின் உரிமைகளிற்கு தாக்கம் செலுத்துமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நிதியத்தின் வருமானமாக இனங்காணப்படவில்லை என மற்றும் ஆண்டின் மிகை மிகைமதிப்பிடப்படவில்லையென. | இத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் அப/12/0489/509/022 கொண்ட 2012 மே 04 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வட மாகாணத்தின் புற்றுநோயாளர்களிற்கான கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக (Trail Project) சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனமாகிய நம்பிக்கை பொறுப்பு கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்த கருத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பலை ஆதார வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சை அலகு நிர்மாணித்தல் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சை அலகுக்காக மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.தெல்லிப்பலை வைத்தியசாலையை நிர்மாணிக்க மேற்குறித்த நம்பிக்கை பொறுப்பு கம்பனிரூபா 218.6 மில்லியன் | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானம் பிரகாரம் குறித்த நம்பிக்கை பொறுபபு கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ள சட்டமா அதிபரின் தலையீட்டை கோரி 2024 ஜுன் 14 திகதி கடிதமொன்று அனுப்பியுள்ளதென. | நிதியை விரைவாக அறவிட்டு நோக்கத்துடனான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தொகையை உதவியாக வழங்கியிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் Jaffna Project பெயரில் குறித்த நம்பிக்கை பொறுப்பு கம்பனியால் சேகரிக்கும் உதவித் தொகை சுகாதார அமைச்சின் சொத்து ஒன்றாக காணப்படுவதால் 2023 மார்ச் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 72,356,055 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்பாண போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் அலகை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தாது அந்த கம்பனியின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்தவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கூட்டுத்தாபனம் சார் நிருவாகத்திற்கான வழிகாட்டியின் 2.3 வழிகாட்டல் | சட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ளக் கூடியவாறு மூலோபாயத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அவ்வாறான திட்டம் ஒன்றை தயாரித்திருக்கவில்லை. | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் மூலோபாயத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதென. | பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 371,298,795 மிகை ஒன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 164,877,522 தொகை ஆக இருந்தது. அதன் பிரகாரம்முகாமைத்தவத்தின் கருத்துரை நிதி விளைவுகளில் ரூபா 206,421,273 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீளாய்வாண்டின் நிதியம் மற்றும் ஏனைய பெறுவனவுகளால் செய்யப்பட்ட செலவுகள்ரூபா 1,297,970,382 தொகையினால் குறைந்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு பத்து மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்கான Little Heart கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டு இறுதிவரை திரட்டிய பொது மக்கள் நிதியங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 624,435,910 ஆன போதும், அந் நிதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 81,397,296 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | கருத்திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு அறிவித்து பணிப்பாளர் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு நினைவூட்டல் அனுப்பியுள்ளதாக. | அன்பளிப்புத் தொகையை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆகஸ்ட் 29 திகதிய இலக்கம் அப/13/1172/509/052 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பொன்றாக நிறுவுவதற்கு மற்றும் அதன் பொறுப்பை நிறுவுவதற்காக அமைப்புச் சட்டத்தை விதிக்கும் வரை காணப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஏற்பாடுகளிற்கு இணங்க கருத்திட்டம் ஒன்றாக நடாத்திச் செல்ல விசேட பயிற்சி பெற்ற தொழிற்துறையாளர்களைவைத்துக் கொள்ளக் கூடிய வகையில் வெளிநாட்டு உதவியின் மீது செயற்படும் கருத்திட்டத்திற்காக ஆளணியினரை ஆட்சேர்க்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் நியமிக்கப்பட்டுள்ள இலக்கம் 33 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்தல் மற்றும் அந்த சுற்றறிக்கையை வழிகாட்டியாக பயன்படுத்தி கண் வங்கிக்கு கிடைக்கும் அன்பளிப்புக்களை பயன்படுத்தி சம்பளம் செலுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவனத்துடன் 2010 ஆண்டில் கைச்சாத்திட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் மேற்குறித்த அமைச்சரவை அங்கீகாரம் பிரகாரம், 2023 ஒக்டோபர் 17 திகதிய 2023 இன் 22 கொண்ட இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு சட்டத்தின் மூலம் வேறான நிறுவனசார் கட்டமைப்பு ஒன்றுடனான அலகொன்றாக இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பு நிறுவப்பட்டிருந்த போதும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அதன் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிட வேறாக நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்காததுடன் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய கணக்கின் கருத்திட்டமொனறாக கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 12/2003 பிரகாரம் நிறுவனமொன்று நிறுவப்பட தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கம் உள்ளிட்ட கூட்டுத் திட்டமொன்றை தயாரித்து அதற்கு இணங்க நிறுவனத்திற்கு தேவையான ஆளணியனரை தீர்மானித்து பதிவிகளை உறுவாக்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்று ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்து ஆட்சேர்க்க வேண்டுமென, நிதியத்தின் மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பின் நமபிக்கை பொறுப்புச் சபை நிறுவப்படும் வரை நிதியத்தின் கருத்திட்டமொன்றாக நடாத்திச் செல்ல அங்கீகரிக்கப்பட்டுள்ளதென மற்றும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க தேவையான யாப்பு ரீதியான பின்னணியொன்று இல்லையென. | இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலங்கை தேசிய கண் வங்கிக்காக ஆளணியினரை ஆட்சேர்க்கும் திட்டத்தை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள கணக்காய்வு திகதிய 2024 ஜுலை 15 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 12/2003 பிரகாரம் கூட்டுத் திட்டமொன்றிற்கு இணங்க பதிவிகளை உறுவாக்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் ஊழியர்களை ஆட்சேர்க்க வேண்டுமென மற்றும் கூட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு விலைமனு கோரி தொழிநுட்ப குழுவின் மதிப்பீட்டிற்கு சமர்ப்பித்துள்ளதென. | ஆட்சேர்க்கும் திட்டத்தை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மேற்குறித்த சுற்றறிக்கையின் 1.1 பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்காத காரணத்தால் கண் வங்கி வெளிநாட்டுதவி கருத்திட்டமொன்றாக | சுகாதார அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வெளிநாட்டுதவி மூலம் செயற்படும் கருத்திட்டங்களின் கடமையாற்றும் | கொடுப்பனவு தொடர்பில் அமைச்சரவையின் மற்றும் பொது திறைசேரியின் |

| | | |
|---|---|---|
| இனங்காண முடியாதிருக்கையில் உலக சுகாதார அமைப்பின் நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் கருத்திட்டம் மூலம் நடாத்தப்படும் கூட்டங்கள், செயலமர்வு, பயிற்சி நிகழ்சித் திட்டம் ஆகியவற்றின் வளவாளர்கள், பங்குபற்றுபவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பங்குபற்றும் ஏனைய அலுவலர்களிற்கு கௌரவப் படிகள், நாட்படிகள் மற்றும் விரிவுரை கட்டணம் செலுத்துதல் தொடர்பாக விநியோகித்திருந்த 2022 திசெம்பர் 22 திகதிய இலக்கம் 1822/11 கொண்ட சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையை அடிப்படையாக்க கொண்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் மீது ஒரு அலுவலரிற்கு மாதத்திற்கு 14 நாட்கள் வீதமானவாறு கௌரவ படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கியின் 23 அலுவலர்கள், சுகாதார அமைச்சின் மற்றும் சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 08 அலுவலர்கள் உள்ளிட்ட 31 அலுவலர்களிற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,990,400 செலுத்தப்பட்டிருந்தது. படிகள் செலுத்தியது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் அல்லது பொது திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தொழிற்துறையாளர்களின் சேவைக்காக அமைச்சரவையின் மற்றும் திறைசேரியின் முன்கூட்டிய அங்கீகாரத்துடன் விநியோகிக்கப்பட்டுள்ளதால் சுற்றறிக்கைக்காக மீண்டும் திறைசேரியின் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையில்லையென மற்றும் தேசிய கண் வங்கி மீளாய்வாண்டில் வெளிநாட்டில் இருந்து விழிவென்படலத்திற்காக கிடைக்கும் மானியம் மூலம் நடாத்திச் செல்லப்படுவதால் அங்கு கடமையாற்றும் சுகாதார அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்திசாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களிற்கு சுகாதார அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான சுகாதார செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதென. | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 2023 திசெம்பர் 31 திகதி வரை அபேக்ஷா வைத்தியசாலைக்கான அன்பளிப்பு கணக்கில் ரூபா 406,243,364 தொகை எஞ்சி இருந்ததுடன் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் எவ்வித ஆக்கபூர்வ செயல்களிற்கும் இந்நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகிறது. | | |
| (i) அபேக்ஷா வைத்தியசாலைக்கு சிறுவர் வாட் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் Thermo Therapy இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக முறையே 2015 மற்றும் 2019 ஆண்டுகளில கிடைத்திருந்த கூட்டுத் தொகை ரூபா 153,540,440 ஆன் பொது மக்கள் உதவித் தொகையை குறித்த நோக்கத்தை | 1981 இன் 13 இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய சட்டத்தின் 6 மற்றும் 7 (இ) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு விசேட உத்தேச முறைமையொன்றிற்காக கிடைக்கும் அன்பளிப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் அந்த | அன்பளிப்பாக கிடைத்த தொகையை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்து கொள்ள ஈடுபடுத்தியிருக்கவில்லை. | வெளிநாட்டு கருத்திட்டத்திற்காக அரச ஏற்பாடுகளிற்கு இணங்க கொடுப்பனவு செய்வது மாத்திரம் நிதியத்தின் பணியாகுமென, அந்த வெளிநாட்டு கருத்திட்டத்தை செயற்படுத்தும் போது அதிகாரியாவது குறித்த அன்பளிப்பு கிடைக்கும் நிறுவனத்தின் பிரதானியாகுமென மற்றும் Thermo Therapy இயந்திரத்திற்காக கிடைத்துள்ள அன்பளிப்பு உள்ளடங்களாக அன்பளிப்புக்கள் CT Simulator நிறுவுவதற்கு பயன்படுத்தப்படுவதென. | |
| (ii) | 2022 ஆண்டில் அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நிலவிய பொருளாதார நெருக்கடியின் முன் நோயாளர் சிகிச்சை சேவையை தொடர்ந்து நடாத்திச் செல்ல Thermo Therapy இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய திரட்டிய அன்பளிப்புத் தொகையை மற்றும் Pet Scan இயந்திரமொன்றை கொள்வனவு செய்த பின்னர் எஞ்சிய தொகையை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 202,309,478 தொகையான CT Simulator இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல், அந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான கட்டிடத்தை நிர்மாணிக்க மற்றும் Sonial Vision x – ray இயந்திரத்தை நிறுவவுள்ள கட்டிடத்திற்காக மின்சார வழங்கலை பெற்றுக் கொள்ளல் ஆகிய பணிகளை நிறைவேற்ற மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 நவம்பர் 02 திகதி பிரதி பணிப்பாளரினால் (உயிரியல் விஞ்ஞானம்) அறிவித்துள்ளவாறு CT Simulator இயந்திரத்துடன் தொடர்பான மாதிரியின் வித்தியாசம் காரணமாக அழைப்பித்த டென்டரை இரத்துச் செய்து மீண்டும் டென்டர் கோருவதென. GE 68 Calibration Phantom for Pep CT Machine செயற்பாடுகளை எடுக்குமாறு எமது 2023 திசெம்பர் 28 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 1998 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்கு பல்வேறு 04 கருத்திட்டங்களிற்குரியதாக கிடைத்த ரூபா 13,758,807 ஆன அன்பளிப்பை நோக்கத்துடனால் பணிகளை | கிரிகோரிஸ் அப்புஹாமி நிதியத்தை தங்கல்ல ஆதார வைத்தியசாலை நோயாளர் கழிவறைகளை திருத்துவதற்கு பயன்படுத்துவதென, | நோக்கத்துடனான பணிகளை மேற்கொள்ள அன்பளிப்புத் தொகையை வினைத்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ள பயன்படுத்தாது அன்பளிப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | தெலசீமியா நோயாளர்களிற்கான பொது மக்கள் நிதியத்தை தேவையான போது பெற்றுக் கொள்ள தடுத்து வைக்குமாறு அறிவிக்க்ப்பட்டுள்ளதென மற்றும் கொவிட் தடுப்பு நிகழ்சித் திட்டத்திற்காக கிடைத்துள்ள தொகையை அந்த நிகழ்சித் திட்டத்திற்காக மாத்திரம் பயன்படுத்த முடியுமாகையால் நம்பிக்கை பொறுப்பு சபையின் வழிகாட்டலின் கீழ் செலவுகளை அனுப்புமாறு பிரதான நிதி அலுவலரிற்கு அறிவித்துள்ளதென. | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை அறுவை சிகிச்சை கட்டித்தொகுதியை மேம்படுத்த அன்பளிப்பாளர் ஒருவரினால் 2020 ஆண்டில் வழங்கியிருந்த ரூபா 42,035,398 தொகை மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவையான நுகர்புப் பொருட்களை கொள்வனவு செய்ய மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 11,250,000 ஆன அன்பளிப்பு தொகையை குறித்த பணிகளை மேற்கொள்ள பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | Little Heart கருத்திட்ட நிதி மற்றும் நுகர்புப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நிதி College of Pediatrician மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் கோரிக்கை பிரகாரம் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது | நோக்கத்துடனான பணிகளை மேற்கொள்ள அன்பளிப்புத் தொகையை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் கருத்திட்ட பணிகளை பூர்த்தி செய்து 03 கருத்திட்டங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 9,324,047 ஆன் எஞ்சிய தொகையை அக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் அன்பளிப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | Fellowship programme for Korean Doctors எஞ்சிய தொகையை மேலதிக செயலாளர் பொது மக்கள் இணைப்பாளரினால் தடுத்து வைக்குமாறு அறிவித்துள்ளதென, இரத்தினபுரி வைத்தியசாலைக்கான PCR இயந்திரத்தின் எஞ்சிய தொகையை சமயலறை நவீனமயமாக்களிற்கு, ஹம்பத்தொட மாவட்ட PCR இயந்திரத்திற்கான எஞ்சிய தொகை நோயாளர்களை பார்வையிட வரும் மக்களிற்காக அமர்வதற்காக இடமொன்றை தயாரிக்க | நிதியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் மோட்டார் சைக்கில்களை நிறுத்தி வைக்க கொட்டிலொன்றை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்பதென. | |
| (எ) | 2005 ஆண்டில் மீகஹகியுல வைத்தியசாலை வாட்டு கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் வேலைகளை பூர்த்தி செய்யாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,372,346 ஆன் செயலாற்றுகை காப்பு பிணைமுறியை காப்புறுதி நிறுவனத்தினால் மீள்நிரப்பி இருக்கவில்லை. அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கட்டுப்பாட்டுச் சபையின் தீர்மானமொன்றின் மீது மீளாய்வாண்டினுள் அத் தொகை ஐயக் கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | இந்த செயலாற்றுகை காப்புப் பிணைமுறி காலாவதியாகி உள்ளதாக, இதற்காக நிதிய ஊழியர்களை பொறுப்புவாய்ந்த தரப்பினராக பெயரிட முடியாதென மற்றும் நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபை விடயங்களை ஆய்வு செய்து இதனை நிதியத்தின் கணக்குகளிலிருந்து பதிவழிக்க தீர்மானித்துள்ளதென. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சொந்தமான கட்டிடத்தை திருத்தம் செய்துகட்டண வாட்டொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் கட்டிடத்தை திருத்துவதற்கு பதிலாக 8 அறைகளைக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிக்க சுகாதார அபிவிருத்தி நிதியிலிருந்து ரூபா 18.20 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2017 இல் இந்த கட்டண வாட்டு நிறுவப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் கட்டண வாட்டின் வருமானத்தில் 60 சதவீதத்தை தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிக்கும்மீதியை திரண்டநிதியத்திற்கும் செலவு வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்காகரூபா 2,113,932 ஆன தொகை கட்டண வாட்டின் வருமானமாக நிதியத்திற்குகிடைத்திருந்த போதும், கடந்த இரண்டு ஆண்டுகளில் வருமானம் கிடைக்காது விளைவற்று காணப்பட்டது. | மீளாய்வாண்டில் நாட்டில் நிலவியநிலைமை காரணமாககட்டண வாட்டிற்காக நோயாளர்கள் அனுமதிக்கப்படாததால் வருமானம் கிடைக்கவில்லை எனவும் மற்றும் கட்டண வாட்டை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுமாறு சுகாதார செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டண வாட்டிற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காககட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய நிதியத்தின் செயல்நடடிவக்கை திட்டம் பிரகாரம் 2022 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம்நிறைவேற்ற முடியாது போன பணிகள் உட்பட மதிப்பீட்டு பெறுமதி ரூபா 204,037,268 ஆன கருத்திட்ட பணிகளை ஆண்டினுள் நிறைவேற்ற எதிர்பார்த்த போதும் அந்த அங்கீகாரத்திற்கு முரணாக கிரயம்ரூபா 61,368,422 ஆன 02 பணிகளை நிறைவேற்ற தேவையில்லையென அபேக்ஷாவைத்தியசாலையின் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன்ரூபா 49,000,000 கிரயமான ஒரு பணி ஆண்டில் முடிக்கப்படவில்லை. அதன் பிரகாரம்வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் எதிர்பார்த்தவாறு நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியாதிருந்தது. | மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கியிருந்த அபேக்ஷா வைத்தியசாலையின் 02 செயல்பாடுகளை நிதியத்திலிருந்து மேற்கொள்ள தேவையில்லை என அறிவித்து குறித்த வவுசர் பத்திரத்தை அபேக்ஷா வைத்தியசாலையின் மூலம் மீண்டும் பெற்றுக் கொண்டதாக மற்றும் அப் பணிகளை 2024 நிதியாண்டில் Ongoing Activities ஆக குறிப்பிடபபட்டுள்ளதென. | நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செயற்படுத்த முடியுமான செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) தேசிய கண் வங்கியின் 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தினுள் அதன் செயலாற்றுகை பின்வருமாறு.

| விடயம் | 2021 | | | 2022 | | | 2023 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேகரிக்கப்பட்ட விழிப் படலம் (விழிவென் படலம்) எண்ணிக்கை | 665 | | | 1010 | | | 1107 | | |
| விழிப் படலம் (விழிவென் படலம்) பயன்பாடு | கேள்வி | வழங்கல் | வழங்கல் சதவீதம் | கேள்வி | வழங்கல் | வழங்கல் சதவீதம் | கேள்வி | வழங்கல் | வழங்கல் சதவீதம் |
| அரச வைத்தியசாலை | 686 | 294 | 43 | 767 | 454 | 59 | 1054 | 518 | 49 |
| தனியார் வைத்தியசாலை | 256 | 124 | 48 | 357 | 195 | 55 | 378 | 191 | 50 |
| வெளிநாடுகளிற்கான விற்பனை | 269 | 223 | 83 | 344 | 325 | 94 | 338 | 323 | 95 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 மற்றும் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் கண் வங்கியினால் சேகரிக்கப்பட்டிருந்த விழிவென் படலங்களின் எண்ணிக்கை முறையே 66 சதவீதத்தால் மற்றும் 9.6 சதவீதத்தால் | தேசிய கண் வங்கி வரையருத்த ஆளணியினருடன் செயற்படுவதென, தேசிய கண் வங்கி அதிக கவனம் | ஆண்டினுள் திரட்டும் கண் விழிவென்படல எண்ணிக்கைய அதிகரித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்திருந்ததுடன் 2023 ஆண்டில் சேகரித்த 1107 ஆன கண் விழிவென் படங்களின் 75 அல்லது 7 சதவீதம்காலாவதியாகி அல்லது அறுவை சிகிச்சைக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டதால் பாவனையிலிருந்து அகற்ற நேரிட்டிருந்தது.விழிப்படலங்களின்தகைகை மயற்ற தன்மை தொடர்பான 08 பரிசோதனை அறிக்கைகள் மாத்திரம் வெளி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் ஏனைய கண் விழிப்படல பரிசோதனை அறிக்கை நிறுவனத்தின் உள்வாறியாக மாத்திரம் பெற்று அதன் மீது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | செலுத்துவது உள்நாட்டு விழிவென்படல வழங்களிற்காகவென, | கொள்ள மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்காக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (ii) | 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் அரச வைத்தியசாலைகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் முறையே 43 சதவீதம், 59 சதவீதம் மற்றும் 49 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தனியார் வைத்தியசாலைகளின் கண் விழிவென் படலங்களிற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையின் 48 சதவீதம் முதல் 55 சதவீதம் வரை வீச்சளவான அளவு மற்றும் வெளிநாடுகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் 83 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை வீச்சளவான அளவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2023 இன் 22 கொண்ட இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு சட்டத்தின் நோக்கங்களில் காணப்படுவதன் பிரகாரம் அரச வைத்தியசாலைகளிற்கு இலவசமாக விழிவென்படலங்களை வழங்கவும் மிகையை ஏனைய நாடுகளிற்கு நியமிக்க முடியுமான தயாரிப்பு கட்டணத்திற்கு வழங்கவும் இயலுமை காணப்பட்ட போதும் கண் வங்கி அரச வைத்தியசாலைகளில் தேவைகளை நிறைவேற்றுவதனை விட வெளி நாடுகளின் கோரிக்கைகளிற்கு வழங்க கூடுதல் கவனம் செலுத்தியிருந்தது. | தேசிய கண் வங்கி வரையறுத்த ஆளணியினருடன் செயற்படுவதென,தேசிய கண் வங்கி அதிக கவனம் செலுத்துவது உள்நாட்டு வெண்பட வழங்களிற்காகவென, | தேசிய விழிவென்படல தேவைப்பாட்டை நிவர்த்திக்க முன்னுரிமை வழங்க வேண்டும். |

## 3.3 நிதிய குறை பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியத்தை பயன்படுத்துதல் பலவீன நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 திகதியளவில் பொது நிதியத்தின் திரண்ட வருமானம் ரூபா 729,412,012தொகையானதுடன் சட்டத்தின் நோக்கங்களை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் பொது நிதியங்களிலிருந்து செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 60,614,018 தொகை மாத்திரமே ஆகும். இதன் படி நிதியத்தின் பணப் பயன்பாடு 8.3 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியின் 2.2.1 பந்தி பிரகாரம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் நிதியத்தின் நிதியினை பயன்படுத்தப்படுவதுவதெென. | உரிய நிறுவனங்களுக்கு அறிவூட்டப்பட்டு நிதியை திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2010 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் ரூபா 674,624,055 தொகை லொத்தர் வருமானமாக கிடைத்திருந்ததுடன் லொத்தர் ஆரம்பத்தில் வைத்தியசாலை உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் வைத்தியசாலைகளின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இந்த வருமானம் ஈடுபடுத்தப்படவேண்டுமென தீர்மானித்திருந்த போதும் அந்த நோக்கத்துடனான பணிகளை மேற்கொள்வதற்காக 2023 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் முறையே ரூபா 95,053,462மற்றும் ரூபா 332,146,734ஆக கூட்டுத்தொகை ரூபா 427,200,196தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பத்தி 7 இன் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களுக்காக லொத்தர் வருமானமான ரூபா 674,624,055 இலிருந்து ரூபா 629,241,009 செலவிடப்பட்டிருந்ததாக மற்றும் லொத்தர் வருமானத்தின் பயன்பாடு 93 வீதமான உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதென. | லொத்தர் செயற்படுத்துவதன் மூலம் எதிர்ப்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற லொத்தர் வருமானங்களை பயன்படுத்த வேண்டும். |